செ.வெ.எண்.55 நாள்:21.04.2017

திருநெல்வேலி மாவட்ட நீர் தேக்கங்களில் குறைந்த நீர் இருப்பு உள்ளதால் மே 1 ம் தேதி முதல் தொழிச்சாலைகளின் தொழில் தேவைகளுக்கு தண்ணீர் வழங்குவதை நிறுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் உத்தரவு.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது.-

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நீர் தேக்கங்களில் 10.04.2017 அன்றைய நிலவரப்படி பாபநாசம் அணையில் 707.25 மி.க. அடியும், மணிமுத்தாறு அணையில் 494.68 மி.க. அடி நீரும் என மொத்தம் 1201.93 மி.க. அடி நீர் இருப்பு உள்ளது. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் குடிநீர் தேவைக்காக நீர் தேக்கங்களில் இருந்து தினசரி வினாடிக்கு 250 க.அடி தண்ணீர் திறக்கப்படுகிறது. இதிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்தில் இயங்கி வரும் 8 தொழிற்சாலைகளுக்கு அரசு ஆணையின் படி வினாடிக்கு 19.73 க. அடி தண்ணீர் தினசரி வழங்கப்பட்டு வருகிறது.

வடகிழக்கு பருவமழை பெய்த்ததன் காரணமாக திருநெல்வேலி மாவட்டத்தில் நிலவி வரும் வரட்சியின் காரணமாக நீர் இருப்பு குறைவாக உள்ளதால் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் மே மற்றும் ஜீன் மாத குடிநீர் தேவைகளை கருத்தில் கொள்ளும் போது குடிநீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. குடிநீர் தேவை தவிர இதர தேவைகளுக்கான தண்ணீர் தேவையை நிறுத்தம் செய்தால் மட்டுமே குடிநீர் தேவையை ஓரளவு சமாளிக்க இயலும் என்பதால் தொழிற்சாலைகளின் தொழில் தேவைகளுக்கான தண்ணீரை தற்போதய சூழலில் குடிநீருக்கே முக்கியத்துவம் அளிக்க வேண்டும் எனவும் பிற தேவைகளுக்கு தண்ணீர் வழங்குவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும் என தமிரபரணி வடிநிலக்கோட்ட செயற்பொறியாளர் பரிந்துரை செய்துள்ளார்.

மேலும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும் திருநெல்வேலி மாவட்டத்தில் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் தண்ணீரை ஒழுங்குப்படுத்தி கண்காணித்து தற்காலிகமாக நிறுத்தி வைத்தால் தூத்துக்குடி மாவட்டத்தில் குடிநீர் தேவையை ஓரளவு சரிசெய்யலாம் எனவும் தெரிவித்துள்ளதாக செயற்பொறியாளர் அறிக்கை செய்துள்ளார்.

தற்போதைய சூழல் கடும் கோடையால் நீர்நிலை ஆதாரங்களில் குடிநீர் இருப்பு குறைவு மற்றும் பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்குதல் ஆகிய அனைத்து பிரச்சனைகளையும் பரிசீலனை செய்ததில் திருநெல்வேலி மாவட்டத்தில் தற்போது தொழிற்சாலை தொழில் வேலைகளுக்கான தண்ணீர் வழங்கப்பட்டு வரும் மதுரா கோட்ஸ் (4.00 கன அடி) மதுரா கோட்ஸ் (1.66 கன அடி) சன் பேப்பர் மில் (1.00 கன அடி) இந்தியா சிமின்ட்ஸ் (2.00 கன அடி) சர்வலெட்சுமி (2.54 கன அடி) சிப்காட் கங்கை கொண்டான் (5.54 கன அடி) அர்ஜீனா பல்ப் & பேப்பர்ஸ் (0.54 கனஅடி) சேஷாயி பேப்பர் மில்ஸ் (2.54 கன அடி) ஆகிய 8

தொழிற்சாலைகளுக்கும் தினசரி மொத்தம் வினாடிக்கு 19.73 கன அடி தண்ணீர் வழங்குவதை 1.05.2017 முதல் தற்காலிகமாக நிறுத்தம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் பெய்யும் மழை அளவு, அணைகளில் உள்ள நீர் இருப்பை கணக்கில் கொண்டு மறு உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை மேற்கண்டுள்ள தொழிற்சாலைகள் தண்ணீருக்கு மாற்று ஏற்பாடு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

(ஒப்பம்)
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி